INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

ஊடக அறிக்கை :

**போர்க்குற்றம் இழைத்ததாக கருதப்படுபவர்களுக்கு பதவி உயர்வு வழங்காது வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கவும்**

2017 மே 26- ம் திகதி

**ஜோகன்னஸ்பர்க்**: ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போர்க்குற்றம் இழைத்ததாக கருதப்படுபவர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு பதிலாக வழக்கு தொடர நடவடிக்கை எடுக்க ஆரம்பிக்க வேண்டும் என உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயட்திட்டத் தின் அறிக்கை கூறியுள்ளது. இவ்வகையிலான குற்றம் புரிந்தவர்கள்தொடர்பில் ITJP கோப்புத்தொகுப்பு ஒன்றினை தயாரித்து வருகிறது. அத்தொகுப்பின் முதலாவது வெளியீட்டிலே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. 2008 - 9 களில் நடைபெற்ற சிவில் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் பொழுது சாதாரண குடிமக்கள் மீதும் வைத்தியசாலைகள் மீதும் தாக்குதல் நடைபெற்றது தொடர்பில் ராணுவ ஆளணியின் முன்னை நாள் தலைவரான ஜகத் டயஸிக்கு தொடர்பு உள்ளதாக ITJP யின் கோப்பு காட்டுகின்றது .

ஹைட்டியின் ஐநா சமாதான படையணியில் உள்வாங்கப்பட்டிருந்த இலங்கை ராணுவத்தினர் கற்பழித்ததாக சுமத் தப்பட்ட குற்றசாட்டுகளை விசாரணை செய்வதற் கு பொறுப்பாக ஜகத் டயஸ் நியமிக்கப்பட்டிருந்தார் என்று அசோ சியேடட் பிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. ஆனால் கற்பழித்ததாக முறைப்பாடு செய்தவரையோ அவர்மீது வைத்தியபரிசோதனை செய்த ஆளணியினரையோ நேரில் சந்தித்து விசாரிக்காது குற்றம் சுமத்தப்பட்ட இராணுவத்தினர்களை குற்றம் புரியாதவர்கள் எனக்கூறி விடுவி த்துள்ளார்.

"*கற்பழித்ததாக குற்றம் சுமத்தப்பட்ட இலங்கை இராணுவ ஆளணியினர் மீதான குற்றசாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்த போர்க்குற்றம் சுமத்தப்பட்ட ஜகத் டயஸ் அவர்களை நியமித்தது பாதிப்புற்ற ஹெய்டி நாட்டினரை அவமதித்த தற்கு ஒத்ததாகும்.*" என ITJP *யின் நிறைவேற்று பணிப்பாளர் யாஸ்மின் சூகா அவர்கள் கூறியுள்ளார்.* "*ஜகத் டயஸ் மீதே விசாரணை நடத்தப்பட்டிருக்கவேண்டும். ஹைட்டியில் கடந்தகாலங்களில்*

*இழைக்கப்பட்ட குற்றங்கள் சுயாதீனமாக விசாரணை செய்யப்படும் வரை ஐநா சமாதான படைக்கு இலங்கை இராணுவத்திலிருந்து ஆட் சேர்ப்பதை ஐநா நிறுத்திக்கொள்ளவேண்டும். குற்றம் சுமத்தப்பட்ட ஒருவர் கற்பழிப்பு கள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட வர்களை அக்குற்றங்களிலிருந்து விடுவிக்க தகுதியற்றவராவார். உண்மையிலேயே இலங்கை மக்கள் மாத்திரம் அன்றி ஹைட்டியின் மக்களும் இதைவிட சிறந்த வகையில் நியாயம் பெற தகுதி உள்ளவர்கள் ஆவர்" என தொடர்ந்தும் அவர் கூறி உள்ளார்.*

சாதாரண குடிமக்கள் மீதோ அல்லது அவர்கள் இருந்த இடங்களின் மீதோ இலக்கு வைத்து பல்வகை தாக்குதாக்குதல்களை நடத்தியதில் ஜெகத் டயஸுடைய 57 வது பிரிவினரும் பங்குபற்றினார்கள் என்ற குற்ற சட்டு உள்ளதாக ITJP யின் கோவை தொகுப்புகள் விபரிக்கின்றன. இக்குற்ற சாட்டு ஒரு நீதிமன்றில் நிரூபிக்கப்படுமேயாயின் அச்செயல் போர்க்குற்றங்களுக்கு ஒத்ததாக்க கருதப்படும்.

ஐநா நடத்திய புலனாய்வின்படி 2009-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் "யுத்த சூனிய பகுதியாக" (no-fire zone) பிரகடனப்படுத்தப்பட்ட வள்ளிபுனத்தில் இருந்த தற்காலிக வைத்தியசாலையினை இலக்காக்கி 15 நேரடி தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அத்துடன் அப்பகுதியில் ஒரு கிலோமீட்டர சுற்றுவட்டத்திட்குள் 50 ற்கு மேற் பட்ட ஆட்டிலரி தாக்குதலின் தாக்கம் ஏற்பட்டிறிந்தது. வைத்தியசாலை அமைந்திருந்த இடம் பற்றி 57 -ம் பிரிவினருக்கும் ஏனைய அலுவலருக்கும் தெரியப்படுத்தப் பட்டிருந்ததுடன் வைத்தியசாலை என்ற அடையாளமும் இடப்பட்டிருந்தது. அது இராணுவத்தின் ஆளில்லா விமானங்களுக்கு நன்கு பார்க்கக்கூடிய தாகவும் இருந்த்தது அப்படியிருந்தும் குறித்த தாக்குதல் நடைபெற்றுள்ளது. குறித்த வைத்திய சாலையில் நூற்றுக்கணக்கான காயமுற்ற பொதுமக்கள் சிகிச்சை பெறஇருக்கையில் பல்குழல் ராக்கெட் லாஞ்சர்கள் மூலமும் கொத்துக்குண்டுகள் மூலமும் பரந்த அளவில் சேதம் ஏற்படுத்தக்கூடிய வகையில் தாக்குதல் நடத்தியதால் பெருமளவிலானோர் படுகொலை செய்யப்படுவர் என எதிர் பார்த்து நடத்தப்பட்டதாக இருந்துள்ளது.

*"காயப்பட்டவர்கள் நிரம்பியிருந்த வைத்திய சாலைகளுக்கு இவ்வகையில் பரந்தலாலாவில் மீண்டும் மீண்டும் தாக்குதல் நடந்த்தியது உண்மையிலேயே காட்டுமிராண்டித்தனமாக." என திருமதி சூகா கூறினார் . "இவ்வகையான தாக்குதல்களுக்கு எதிராக வழக்கு தொடர போதிய அளவு ஆதாரங்கள் உள்ளன. சம்பவம் நடந்து எட்டு வருடங்கள் கடந்தும் அவர்களுக்கெதிராக இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வேறு அரசுகளும் பாரிய கொடூர செயல் களை புரிந்து விட்டு இலங்கை இராணுவத்தின் வழிமுறைகளை பின்பற்றி தப்பிவிடு முடியும் என்பதை குறித்த விடயம் தொடர்பில் சர்வதேச ரீதியில் எந்த நடவடிக்கையும் எடுக்காது இருப்பது காட்டியுள்ளது" எனவும் சூகா அம்மையார் கூறியுள்ளார்.*

அரசுக்கு நன்கு தெரிந்த இடத்தில் உள்ள புதுக்குடியிருப்பு வைத்தியசாலை பெருமளவு தாக்குதலுக்குள்ளான வைத்திய நிலையமாகும். ஐநா வினால் எடுக்கப்பட்ட செயமதி படங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் 2009 -ம் ஆண்டு ஜனவரி மாதம் முடிவடைய இரண்டு கிழமைகளுள் ஆகக்குறைந்தது 30 வைத்தியசாலை கட்டடங்கள் ஆவது அழிக்கப்பட்டது அல்லது பாதிப்புக்குளாகியுள்ளன. 2009-ம் ஆண்டு பெப்ரவரி மாத முற்ப குதியில் புதுக்குடியிருப்பில் இருந்த வைத்தியர் பொன்னம்பலம் என்பவரின் தனியார் வைத்திய நிலையம் நூற்றுக்கண்ணைக்கான காயப்பட்டவர்கள் அங்கு இருக்கையில் அழிக்கப்பட்டது. ஆளில்லா விமானம் நோட்டம் இட்டு சற்று நேரத்தில் அதிவேக ஜெட் விமானங்கள் தொடர்ந்து இருதடவைகள்

குண்டு தாக்குதல் நடத்தியமையாலேயே ஆகும். இவ்வைத்தியசாலை சிவப்பு புள்ளடி இடப்பட்டும் வெள்ளைக்கொடிகள் மூலம் வைத்தியசாலை என்று நன்கு காட்டப்பட்டிருந்தது.

“*போர்க்குற்றம் இழைக்கப்பட்டதற்கு பொறுப்புக்கூறல் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற் பதிலாக போர்க்குற்றம் இழைத்ததாக கருதப்பட்ட ஜகத் டயஸ் போன்றவர்களுக்கு பதவி உயர்வு வழங்குவது மாத்திரமே இலங்கை அரசு செய்துள்ளது " ITJP யின் நிறைவெற்றுப் பணிப்பாளர் யாஸ்மின் சூகா அவர்கள் கூறுகிறார். மேலும் "இராணுவத்தின் ஆளணி யின் தலைமை பதவிக்கு அவரை நியமித்தது இராஜபக்ஸகள் அல்ல, ஜனாதிபதி சிறிசேன அவர்களே" என சூகா அம்மையார் கூறுகிறார்.*

**ITJP** யின் கோப்பு தொகுப்பு மனித உரிமை உயர் ஸ்தானிகர் அலுவலகமும் (OHCHR) சர்வதேச சமூகமும் பின்கூறப்பட்டவை நடைபெறுவதை உருதி படுத்தவேண்டும் எனக்கோறி நிற்கின்றது - (அ ) இலங்கைக்கான ஹைபிரிட் (Hybrid) நீதிமன்றம் ஒன்றை துரிதமாக ஸ்தாபித்தல் ; (ஆ ) அதற்கு முன்னர் குற்றவியல் செயல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை நிர்ணயிப்பதற்கு தேவையான விபரங்களைக் திரட்ட சுயாதீன சர்வதேச விசாரணை ஒன்றை நடாத்தல்.

(முற்றிற்று )

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT